# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 104 | 4 Pages | 17.11.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur4 |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 104 | 4 பக்கங்கள் | 17.11.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## தாராபுரம் சாலை விபத்து: உயிரிழந்தோர் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் நிதி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை, நவ.17

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியதாவது:

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மணக்கடவு கிராமம், ஆலங்காட்டுப்பிரிவு என்ற இடத்தில் இன்று (17.11.2023) மாலை டேங்கர் லாரியும், நான்கு சக்கர வானமும் நேருக்குநேர் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தாராபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (65), அவரது மனைவி செல்வி (50), கோயம்புத்தூர் மாவட்டம், பெரிய நாயக்கன் பாளையம், வஞ்சியம்மா நகரைச் சேர்ந்த தமிழ்மணி (50), அவரது மனைவி சித்ரா (45) ஆகிய நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திண்டுக்கல்லைச்சேர்ந்த கலாராணி (55) என்பவர் தாராபுரம் அரசு மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உ யி ரி ழந் த வ ர் க ளின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

## சிறுவாபுரி முருகன் கோவிலில் சத்ருசம்ஹார அர்ச்சனை



ஊத்துக்கோட்டை, நவ.17

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் 6 நாட்கள் நடைபெறும் கந்தசஷ்டி உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. வெள்ளிக்கிழமை சத்ருசம்ஹார அர்ச்சனை மற்றும் சுவாமி பிரகார புறப்பாடு நடைபெற்றது. நிகழ்ச்சியில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

சனிக்கிழமை காலை யாகசாலை பூஜைகள், கலச பூஜைகள், மகா பூர்ணாகுதி, கலசபிஷேகம் உள்ளிட்டவை நடைபெறுகிறது.மாலை 4 மணிக்கு மேல் கோவில் எதிரே சூர சம்ஹார நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 7 மணிக்கு கொடி இறக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வரும் 19ம் தேதி மாலை சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்று இரவு உற்சவர் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## திருப்பூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்ட சிறப்பு குறைதீர் முகாம்; மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

திருப்பூர், நவ.17

திருப்பூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்ட சிறப்பு குறைதீர் முகாம் எதிர்வரும் 18.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை அனைத்து வட்டங்களிலும் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது. இக்குறைதீர்;; முகாமில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் தனி வருவாய் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு செய்ய உள்ளார்கள்.

வ.எண். வட்டம் கிராமம் நடைபெறும் இடம்

1. அவிநாசி கருணைபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கருணை பாளையம்

2. தாராபுரம் தொப்பம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், தொப்பம்பட்டி

3. காங்கயம் உத்தம பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், தாசநாயக்கன்பட்டி

4. மடத்துக்குளம் சர்க்கார் கண்ணாடிப்புத்தூர் வ ஼ . ளு ிநஉயைட 15தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், சர்க்கார் கண்ணாடிப்புத்தூர்

5. பல்லடம் மல்லேகவுண்டன்பாளையம் மகளிர் மேம்பாட்டு திட்ட இசேவை மையம், மல்லேகவுண்டன்பாளையம்

6. திருப்பூர் வடக்கு நெருப்பெரிச்சல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், நெருப்பெரிச்சல்

7. திருப்பூர் தெற்கு கு ப் பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், குப்பாண்டம்பாளையம்

8. உடுமலைப்பேட்டை சனுப்பப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், சனுப்பப்பட்டி

9. ஊத்துக்குளி வடமுக காங்கயபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வடமுக காங்கயபாளையம

மேற்படி முகாமில் பொதுமக்கள் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர்நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு ஃ மாற்றம் செய்தல், புதிய குடும்ப அட்டை ஃ நகல் அட்டை கோரும் மனுக்களை பதிவு செய்தல் போன்ற மின்னணு குடும்ப அட்டை தொடர்பான கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்ள இவ்வாய்ப்பினை தவறாது பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

## திருப்பூர் மாவட்டத்தில் கல்விக் கடன் பெற சிறப்பு முகாம்: மாவட்ட கலெக்டர தா.கிறிஸ்துராஜ் தகவல்

திருப்பூர், நவ.17

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவஇ மாணவிகள் கல்விக் கடனுக்காக விண்ணப்பிக்க ‘சிறப்பு கல்விக்கடன் முகாம்;” நவம்பர் 23, 2023 வியாழக்;கிழமை அன்று மாவட்டத்தின் முன்னோடி வங்கியான கனரா வங்கி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து வங்கிகளின் சார்பில் கல்விக் கடன் வழங்கும் முகாம் திருப்பூர்இ அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தரை தளம், அறை எண் 20ல் நடைபெறவுள்ளது.

கல்விக்கடன் பெற விரும்பும் மாணவர்கள் றறற.எனைலயடயமளாஅள.உழ.னை என்ற இணையதளத்தில் தங்களுடைய விண்ணப்பத்தை தேவைப்படும் ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்து முகாம் நடைபெறும் நாளன்று விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்ப நகல்இ மாணவஇ மாணவியர் மற்றும் பெற்றோரின் இரண்டு புதிய புகைப்படம்இ வங்கி கணக்கு புத்தக நகல், ஆண்டு வருமானச் சான்று நகல்இ சாதிச் சான்று நகல்இ பான் கார்டு நகல்இ ஆதார் அட்டை நகல்இ கல்விக் கட்டண விபரம்இ பத்தாம் வகுப்புஇ பிளஸ் 2 மற்றும் இளநிலை பட்டப் படிப்பின் மதிப்பெண் சான்றிதழ்கள்இ முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்று மற்றும் கலந்தாய்வு மூலமாக பெறப்பட்ட சேர்க்கைக்கான ஆணை போன்ற ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

இதில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் கலந்து கொண்டு மாணவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று கல்விக் கடன் வழங்க மாவட்ட முன்னோடி வங்கி மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவஇமாணவிகள் இந்த அரிய வாயிப்;பினைப் பயன்படுத்தி உரிய சான்றுகளுடன் முகாமில் கலந்து கொண்டு கல்விக் கடன் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் விவரங்கள் அறிய 0421 2971185 என்ற தொலைபேசி எண்ணில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளரை தொடர்பு கொள்ளவும்.



அம்மா அரசு பத்திரிகையாளர் ஜோசப் புதல்வனின் திருமணத்திற்கு திருப்பூர் மாவட்ட மேயர் ந.தினேஷ் குமார் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

## "மேஜிக்" வித்தகரான மோடி: ரசித்த குழந்தைகள்



டெல்லி, நவ.17

இந்திய பிரதமர் நரேந்திர மோடி குழந்தைகள் மீது அலாதி பிரியம் கொண்டவர்.

அவரை காண சில குழந்தைகள் அவரது அலுவலகத்திற்கு வந்தார்கள்.

அவர்களுடன் பிரதமர் மோடி மகிழ்ச்சியாக நேரத்தை செலவிட்டார். அப்போது அவர்களை மகிழ்விக்கும் வகையில் சில 'மேஜிக்' செய்து காட்டினார். இதில் ஒரு நாணயத்தை குழந்தைகளின் நெற்றியில் ஒட்டி அதனை மறைய செய்தார். அதை குழந்தைகள் ரசித்தனர்.

இந்த சம்பவத்தின் வீடியோவை தனது அதிகாரபூர்வ சமூக வலைதள கணக்கில் பிரதமர் பதிவிட்டார். அது இணையத்தில் பரவி வருகிறது. அதில் "எனது இளைய நண்பர்களுடன் சில மறக்க முடியாத தருணங்கள்" என ஓர் குறுஞ்செய்தியையும் பதிவிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட "ரக்ஷாபந்தன்" பண்டிகையின் போது சில குழந்தைகள் அவரை சந்தித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## மத்திய பிரதேசம், சத்தீஸ்கரில் இன்று வாக்குப்பதிவு: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்



ஜெய்ப்பூர், நவ.17

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் தேதிகளை தேர்தல் ஆணையம் கடந்த மாதம் அறிவித்தது.

அதன்படி, 40 தொகுதிகளைக் கொண்ட மிசோரமில் கடந்த 7ம் தேதி வாக்குப்பதிவு நடந்தது. சத்தீஸ்கர் மாநிலத்துக்கான முதல் கட்ட தேர்தலும் 7ம் தேதி நடைபெற்றது.

230 தொகுதிகளைக் கொண்ட மத்திய பிரதேசத்துக்கு இன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்கான பிரசாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது. இதையொட்டி மத்திய பிரதேசத்தில் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷா உள்பட பலர் பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிரமாக வாக்கு சேகரித்தனர். காங்கிரஸ் சார்பில் எம்.பி. ராகுல் காந்தி தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்நிலையில்,மத்தியபிரதேசத்தில்நாளைஒரேகட்டமாகவாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதேபோல், சத்தீஸ்கரில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் இரண்டாவது கட்டமாக 70 தொகுதிகளுக்கு நாளை தேர்தல் நடக்கிறது.

மத்திய பிரதேசத்தில் ஆளும் பா.ஜ.க.வுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன. பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான போலீசார் ஈடுபட்டுள்ளனர்.


## மத்திய பிரதேசம், சத்தீஸ்கரில் இன்று வாக்குப்பதிவு: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்




பெங்களூரு, நவ.17

பெங்களூருவில் உள்ளபிரபலஉணவகம் ஒன்றில் தோசை தயாரிப்பதற்கு முன் தோசை கல்லை சுத்தம் செய்ய துடைப்பத்தை பயன்படுத்தியவீடியோ சமூக வலைதளங்களில் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

தெருவோர கடைகளில் இதுபோன்ற காட்சிகளை சாதாரணமாக காண முடியும் என்றாலும் ஹைடெக் உணவகத்தில் தோசை கல்லை சுத்தம் செய்ய துடைப்பம் பயன்படுத்தப்பட்டிருப்பது நெட்டிசன்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பேஸ்புக்கில்பதிவிடப்பட்ட இதுதொடர்பானவீடியோ2.18நிமிடங்கள் ஓடக்கூடியதாக உள்ளது. வீடியோவின் தொடக்கத்தில் தோசை கல்லில் தண்ணீரை ஸ்பிரே செய்த பின்னர் அதில் துடைப்பத்தை கொண்டு தோசை மாஸ்டர் சுத்தம் செய்கிறார். பின்னர் 12 தோசைகளை கல்லில் ஊற்றி அதில் நெய் பாக்கெட்டை ஸ்டைலாக ஊற்றி மசாலா தோசையை சுடுகிறார்.

முடிவில் அந்த தோசைகள் வாழை இலை தட்டில் வைத்து வாடிக்கையாளர்களுக்கு பரிமாறப்படுகிறது. சுமார் 2 கோடி பார்வைகளை கடந்த இந்த வீடியோ குறித்து வலைதள பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# வால்பாறை அருகே தொழிலாளியின் வீட்டை உடைத்து சேதப்படுத்திய யானைகள்



வால்பாறை, நவ.17

கோவை மாவட்டம் வால்பாறை அருகே ஸ்டேன் மோர் எஸ்டேட் பகுதியில் கடந்த 2 நாட்களாக 17 காட்டு யானைகள் சுற்றி வந்தது.

இரவு நேரத்தில் வனப் பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து சுந்தர்ராஜ் என்பவரின் வீட்டின் ஜன்னல் கதவு, சுவர் போன்றவைகளை உடைத்து சேதப்படுத்தின.

குட்டியானை ஒன்று வீட்டிற்குள் சென்று சமையல் அறையில் இருந்த பொருட்களை சேதப்படுத்தி கிரைண்டர், மிக்சி, கியாஸ் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்களை வெளியே வீசி எறிந்தது. தீபாவளி நாள் என்பதால் வீட்டில் உள்ளவர்கள் வெளியூர் சென்றிருந்தனர்.

இதனால் உயிர் சேதம் இன்றி அவர்கள் தப்பினர். அருகில் இருந்தவர்கள் வனத்துறையினருக்கு தகவல் கொடுத்து வால்பாறை வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து காட்டு யானைகளை அப்பகுதியில் இருந்து விரட்டினர்.

காட்டு யானைகள் வீட்டை உடைத்த விவரம் அறிந்து வீட்டின் உரிமையாளர்கள் வந்து பார்த்து வேதனைஅடைந்தனர். இச்சம்பவம் அறிந்த வார்டு உறுப்பினர் பாஸ்கர் நேரில் வந்து வீட்டின் உரிமையாளர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மேலும் தி.மு.க. நகர செயலாளர் சுதாகர், நகர மன்ற துணை தலைவர் செந்தில்குமார், வெங்கடேஷ், சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் ரூ.5 ஆயிரம் நிதி உதவி வழங்கப்பட்டது.

மேலும் வனத்துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று வீட்டின் உரிமையாளர்கள் கோரிக்கை வைத்தனர். காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரித்து வருவதால் வனத்துறையினர் காட்டு யானைகளை குடியிருப்பு பகுதிக்கு வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# சிறந்த பள்ளியாக சபாநாயக முதலியார் இந்து நடுநிலைப்பள்ளி தேர்வு




சீர்காழி, நவ.17

தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் தொடக்கக்கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் அரசு, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் இருந்து மாவட்டம் தோறும் மூன்று பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த பள்ளிகளுக்கான பரிசு, கேடயம் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி 202223 கல்வி ஆண்டுக்கான மாவட்ட அளவிலான சிறந்த பள்ளிகள் தேர்வு குழு அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறந்த மூன்று பள்ளிகளில் ஒன்றாக சீர்காழி சபாநாயகர் முதலியார் இந்து நடுநிலை பள்ளி தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. இந்த பள்ளிக்கான பரிசு மற்றும் கேடயம் சென்னையில் நடைபெற்ற விழாவில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பள்ளி தலைமை ஆசிரியர் பாலமுருகனிடம் வழங்கினார்.

அப்போது அப்பள்ளியை சேர்ந்த சக ஆசிரியர்களுடன் தலைமை ஆசிரியர் பாலமுருகன் பரிசை பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர் பரிசு பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரை, பள்ளி செயலர் சொக்கலிங்கம் மற்றும் பிற பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் பாராட்டினர்.

# மழையால் பாதிப்பட்ட பயிர்களுக்கு விரைவில் நிவாரணம்



நாகப்பட்டினம், நவ.17

கடந்த சில தினங்களாக தமிழகத்தின் பலபகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இதனால் டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த இளம் நெற்பயிர்கள் மழை நீர் சூழ்ந்து பாதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர் பகுதிகளை அமைச்சர் ரகுபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அதனைத் தொடர்ந்து நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்குப் பருவமழை பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கூறியதாவது

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புயல், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களை மீட்டு தங்க வைக்க ஏதுவாக, மாவட்டத்தில் மண்டல அளவிலானகுழுக்கள், அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து வட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளது.

பாதிக்கப்படும் மக்களை மீட்டு தற்காலிக பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க ஏதுவாக 12 புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளன.

இதில் ஒரு முகாமில் 300 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் மக்களை மீட்க மாவட்ட நிர்வாகத்திற்கு துணையாக 5000 முதல்நிலை பொறுப்பாளர்களும், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை அபாய குறைப்பு முகமை சார்பில் 300 தன்னார்வலர்களுக்கான பேரிடர் கால பயிற்சி அளிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர்.

தாழ்வான பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 206 மரம் அறுக்கும் இயந்திரம், 4,300 மணல்மூட்டைகள், 40,000 சாக்கு பைகள், 2,115 சவுக்கு மரங்கள், 59 நீர் இறைக்கும் இயந்திரம், 24 நீர் உறிஞ்சும் இயந்திரம், 163 லைப்பாய், 142 லைப் ஜாக்கெட் மற்றும் தேவையான மீட்பு உபகரணங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாத்துறை சார்பில் மருந்து பொருட்கள் மற்றும் இதர வசதிகள் தயார்நிலையில் உள்ளது.

மின் பகிர்மான கழகம் சார்பில் 4,500 மின் கம்பம், 100 மின்மாற்றிகள், 120கி.மீ. மின் கம்பிகள் போன்ற மின்சாதன உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது பெய்துள்ள கனமழையின் காரணமாக 16,000 ஏக்கர் சம்பா, தாளடி நெற்பயிர்கள் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளது ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல குறுவை நெற்பயிர் பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு பணிகள் நடத்தப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விரைவில் நிவாரண கிடைக்க நடவடிக்கை எடுக்கபடும் என்றார்.

# 3வது நாளாக மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை



நாகப்பட்டினம், நவ.17

தெற்கு வங்காள விரிகுடாவின் மேற்கு மத்திய மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் உருவாகிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்குவட மேற்கு நோக்கி நகர்ந்து,

காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியதை தொடர்ந்து நாகை துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

ஏற்கனவே வானிலை மையம் எச்சரிக்கையைத் தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்ட மீன்வளத்துறையினர் மீனவர்கள் கடலுக்கு செல்லக்கூடாது எனதடை விதித்தனர்.

இதனால் அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், நம்பியார் நகர், செருதூர், வேதாரணியம், ஆற்காட்டுதுறை உள்ளிட்ட 27 மீனவர் கிராமத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டு படகுகளும் 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் இன்று 3வது நாளாக கடலுக்குச் செல்லவில்லை.

மீனவர்கள் மட்டுமல்லாமல் மீன் பிடித் தொழிலைச் சார்ந்த தொழிலாளர்கள் என1லட்சத்திற்கும் மேற்பட்டோர் வருமானமின்றி வாழ்வாதாரம் பாதித்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

மீன் வரத்து இல்லாததால் நாகை மீன்பிடித் துறைமுகம் வெறிச்சோடி காணப்படுகிறது.



கலெக்டர் கிறிஸ்துராஜ் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் திருப்பூர் தெற்கு வட்டம் ஆண்டிபாளையம் குளத்துப்புதூர், பிள்ளையர் கோவில் வீதியில் வசித்து வரும் மாற்றுத்திறனாளியான சரவணன் என்பவர் மலேசியா நாட்டில் சிக்கித் தவிக்கும் தனது மனைவி தனலெட்சுமி என்பவரை தமிழ்நாட்டிற்கு மீட்டுக்கொண்டு வர இந்திரா சுந்திரம் தொண்டும் நிறுவனம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.50,000த்திற்கான காசோலையை வழங்கினார். உடன் இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் உள்ளனர்.

# திருப்பூரில் சோகம்: லாரியும் காரும் மோதிய விபத்தில் 5 பேர் பலி




திருப்பூர், நவ.17

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே லாரி மீது கார் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.

4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மருத்துவமனையில் ஒருவர் உயிரிழந்தார்.

விசாரணையில் கோவையில் இருந்து பழனி கோவில் சென்று திரும்பியதும், மனக்கடவு பகுதியில் விபத்து ஏற்பட்டதும் தெரிய வந்தது.

காரும், லாரியும் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உலக நீரிழிவு நோய் தின விழிப்புணர்வு பேரணி



தஞ்சாவூர், நவ.17

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியை மருத்து வக் கல்லூரி முதல்வர் பாலாஜி நாதன் கொடி யசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் மருத்துவ கல்லூரி கண்காணிப்பாளர் ராமசாமி, துறைத்தலைவர் மருதுதுரை, நிலைய மருத்துவ அலுவலர் செல்வம், உதவி நிலைய மருத்துவ அலுவலர்கள் முகமது இத்ரிஸ், கௌதமன், மருத்துவத்துறை தலைவர் கண்ணன் மற்றும் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நீரிழிவு நோய் வராமல் தடுப்பது எப்படி என்பது உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியப்படி பேரணியாக சென்று முகப்பு பகுதியில் நிறைவடைந்தது. பின்னர் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பாலாஜி நாதன் அளித்த பேட்டியில், தமிழ்நாட்டில் முதல்முறையாக முன்னோடி திட்டமாக தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பாத மருத்துவம் மற்றும் நீரிழிவு நோய் அறுவை சேவைகள் திட்டம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சர்க்கரை நோயாளிகளில் 25 சதவீதம் பேருக்கு பாத நோய் பாதிப்பு ஏற்பட்டு அதில் 85 சதவீதம் பேருக்கு நோய் முற்றிய நிலையில் கால் துண்டிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 18 ஆயிரம் பேர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 28 ஆயிரம் பேர் பாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே மாதம் ஒரு முறை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் டாக்டர்கள் பங்கேற்கும் பாத நோய் அறுவை சிகிச்சை சிறப்பு முகாம் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடத்தப்பட்டு வருகிறது. சர்க்கரை நோயாளிகள் பாத பராமரிப்பில் கவனம் செலுத்தினால் கால் அகற்றப்படுவதில் இருந்து காத்துக் கொள்ளலாம் என்றார்.

# காலநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம்




திருத்துறைப்பூண்டி, நவ.17

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பில் திருவாரூர் மாவட்ட அளவிலான காலநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம் நடைப்பெற்றது. மாவட்ட வன அலுவலர் ஸ்ரீகாந்த் அனைவரையும் வரவேற்றார்.

கலெக்டர் சாருஸ்ரீ கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார்.

பசுமை மிஷன் உதவி இயக்குனர் மனீஸ் மிஸ்ரா, பூவுலகின் நண்பர்கள் இயக்க சுற்றுச்சூழல் பொறியாளர் பிரபாகரன், பருவநிலை மாற்ற கொள்கை நிபுணர் அருண் பாண்டியன், அண்ணாபல்கலைகழக பேராசிரியர் பவுத்ர பிரியா, டாக்டர் பாலாஜி, டாக்டர் செல்வம், டாக்டர் வேல்முருகன், டாக்டர்பாரதி, சுற்றுச்சூழல் நிபுணர் டாக்டர் பிரபாகரன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள்.

கருத்தரங்கில் காடுகளை அழிப்பதால் பூமியில் வெப்பம் அதிகரித்து பனிப்பாறைகள் உருகி வருகிறது.

இதனால் கடல் மட்டம் உயர்ந்து பல நாடுகள் தண்ணீருக்குள் மூழ்கும் அபாயம் உள்ளது எனவே காடுகளின் பரப்பை அதிகரிக்க வேண்டும்.

பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து மறுசுழற்சி அல்லது எளிதில் மக்ககூடிய பொருட்களை பயன்படுத்த வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை, நீர்நிலை பாதுகாப்பு போன்றவை முக்கியமானவை எதிர்கால சந்ததிகளுக்கு நாம் வளமான பூமியை விட்டு செல்லவேண்டும் என வலியுருத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒ.என்.ஜி.சி குழும பொது மேலாளர் மாறன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ் ஒளி, பாலம் தொண்டு நிறுவனச்செயலாளர் செந்தில்குமார், வனம் அமைப்பை சேர்ந்த கலைமணி, வனத்துறை, தீயணைப்பு துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# சென்னை சார்மினார் எக்ஸ்பிரஸ் ரெயிலை நாகர்கோவில் வரை நீட்டிக்க வேண்டும்: விஜய்வசந்த் எம்.பி. கோரிக்கை

சென்னை, நவ.17

திருவனந்தபுரம் ரெயில்வே கோட்ட மேலாளர் சர்மா நாகர்கோவில் கோட்டார் ரெயில் நிலையத்தில் ஆய்வுக்காக வருகை தந்த போது அவருடன் விஜய்வசந்த் எம்.பி.யும் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் கன்னியாகுமரி மக்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தார்.

வேளாங்கண்ணி செல்ல வாராந்திர சிறப்பு ரயில் தேவையை வலியுறுத்தினார். ஐதராபாத் சென்னை சார்மினார் எக்ஸ்பிரஸ் ரெயிலை நாகர்கோவில் வரை நீட்டிப்பது, திருநெல்வேலி வந்தே பாரத் ரயிலை நாகர்கோவில் வரை நீட்டிப்பது போன்ற ரெயில் நீட்டிப்பிற்கான கோரிக்கைகளை முன் வைத்தார்.

கொரோனா காலத்திற்கு முன் இருந்தது போன்று ரெயில் நிறுத்தங்களை மீண்டும் செயல்படுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ராணுவ வீரர்கள் அதிகமாக பயணம் செய்யும் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் தற்போது நாகர்கோவில் ரெயில் நிலையத்தில் மட்டுமே நின்று செல்வதால் கூடுதலாக ஒரு நிறுத்தம் தேவை என்றும் கேட்டு கொண்டார். நாகரகோவில் சந்திப்பு மற்றும் நாகர்கோவில் டவுன் ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் எனவும் இந்த ரயில் நிலையங்களை நவீன மயமாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் விஜய்வசந்த் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# குட்கா விற்பனை செய்த வியாபாரி கைது

பென்னாகரம், நவ.17

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள பளிஞ்சரஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி மகன் மோகன் (27).

இவர் பென்னாகரம் சுற்றுவட்டார பகுதி மளிகை கடைகளுக்கு மளிகை பொருட்களை 3 சக்கர ஆட்டோ மூலம் விற்பனை செய்து வருகிறார். இவர் சுற்று வட்டாரம் மளிகை கடைகளுக்கும் குட்கா உள்ளிட்ட தடை செய்யப்பட்டபுகையிலை பொருட்களும் விற்பனை செய்வதாக பென்னாகரம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

ரகசிய தகவலின் பெயரில்பென்னாகரம்போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் சிவக்குமார், கோவிந்தசாமி, கோவிந்தன் உள்ளிட்டோர்ரகசியமாககண்காணித்தனர்.

இதையறிந்த தலைமறைவாகமோகனைபோலீசார் சுற்றி வளைத்து பிடித்து கைது செய்தனர்.

அவரிடம் இருந்து குட்கா விற்பனைக்காக பயன்படுத்தி வந்த 3 சக்கர ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர்.

கைதான மோகனை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி செய்து தருமபுரி கிளை சிறையில் அடைத்தனர்.

# ரூ.83 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை, நவ.17

பெருந்துறை வேளாண்மைபொருள்கள் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரை ஏலம் நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள்2,151 மூட்டைகளில், 1,04,000 கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தரக் கொப்பரை குறைந்த பட்சமாக கிலோ ரூ.77.79 க்கும், அதிகபட்சமாக, ரூ.88.30 க்கும் விற்பனையானது.

2ம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக ரூ.30.30க்கும், அதிகபட்சமாக ரூ.82.99 க்கும் விற்பனையானது.

மொத்தம் ரூ. 83 லட்சத்துக்கு கொப்பரை வர்த்தகம் நடைபெற்றது.

# வேலூரில் 2ம் நிலை பெண் காவலர்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி தொடக்கம்



சென்னை, நவ.17

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரும் சுதந்திர போராட்ட தியாகியுமான என்.சங்கரய்யா 102 வயதில் நேற்று மரணம் அடைந்தார்.

அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி அவர் இறந்த தகவலை கேள்விபட்டதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று சங்கரய்யா உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அதன்பிறகு சங்கரய்யா உடல் குரோம்பேட்டையில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு தியாகராயநகரில்உள்ளமார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலதலைமைஅலுவலகத்துக்கு அவரது உடல் கொண்டு வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அங்கு சங்கரய்யா உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. சவுந்தரராஜன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லக் கண்ணு, மாநில செயலாளர் முத்தரசன், வீரபாண்டியன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

சங்கரய்யாவின் இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார்.

அதன்படி சங்கரய்யாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்கு பிறகு இன்று காலை 10.30 மணியளவில் கட்சி அலுவலகத்தில் இருந்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஊர்வலமாக பெசன்ட் நகர் மின் மயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

வழிநெடுக பொதுமக்கள் ஏராளமானோர் அவரது உடலை பார்த்து வணங்கினார்கள்.

அடையாறு பணிமனை அருகே பேரணி வந்த போது கம்யூனிஸ்டு இயக்க தோழர்கள் செஞ்சட்டை பேரணியாக செங்கொடி ஏந்தி நடந்து வந்தனர்.


இந்த பேரணியில் கம்யூனிஸ்டு இயக்க தலைவர்களுடன் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா, பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஜி.ராமகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ சவுந்தரராஜன், இந்துராம், உள்ளிட்ட ஏராளமானோர் நடந்து சென்றனர்.

இறுதி ஊர்வலம் பெசன்ட் நகர் மின் மயானம் சென்றடைந்ததும் சங்கரய்யா உடலுக்கு இறுதி சடங்குகள் நடத்தப்பட்டன. இதில் அவரது குடும்பத்தினர் உள்பட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் பிரகாஷ் காரத், அசோக் தவாலே, கேரள மாநில செயலாளர் கோவிந்தன், மேற்கு வங்காள மாநில செயலாளர் முகமது சலீம் உள்ளிட்ட அகில இந்திய அளவிலான தேசிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அதன்பிறகு சங்கரய்யாவின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

சங்கரய்யாவின் மறைவையொட்டி அனைத்து இடங்களிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. ஒரு வாரம் துக்கம் கடைப்பிடிக்கும் வகையில் கம்யூனிஸ்டு கட்சியின் அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளன.

# சுதந்திரம் அடைந்தது 77 ஆண்டுகளாகியும் தார்சாலை வசதியின்றி தவிக்கும் ஏரி மலை கிராம மக்கள்



தருமபுரி, நவ.17

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த வட்ட வனஹள்ளி ஊராட்சியில் ஏரிமலை, கோட்டூர் மலை, அலகட்டு மலை கிராமத்தில் 250க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர்.

இங்குள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் விவசாயம், கால்நடை வளர்ப்பு நிலமற்ற மலைவாழ் மக்கள் பெங்களூரு, ஒசூர், திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று கட்டிட வேலைகள்உள்ளிட்டபல்வேறு பணி களை செய்து வருகின்றனர்.

பல தலைமுறைகளாக மலைகிராமத்தில்வாழ்ந்து வருவதால் இந்த 3 கிராம மக்களும் உயர்கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கு மலையை விட்டு கீழே இறங்கி வருவதற்கு சாலை வசதி கேட்டு அவதிப்பட்டு வருகின்றனர். இந்த மக்களுக்கு சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகள் ஏற்படுத்தி தர முடியாமல் அரசு இருந்து வருகிறது.

இந்நிலையில்கிராமமக்களே ஒன்றிணைந்து மண் சாலை அமைத்து, சாலையை பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் மழை வருகின்ற பொழுது இந்த மண் சாலை முழுவதுமாக மண் அரிப்பு ஏற்பட்டு பயன்படுத்த முடி யாத நிலையில் இருந்து வரு கிறது. இதனால் வனத்துறை சாலை அமைக்க அனுமதி கொடுத்தால், மத்திய, மாநில அரசுகள் சாலை வசதி செய்து தர முடியும். இதனால் கிராம மக்கள் பல்வேறு இடங்களில் மனு கொடுத்தும், பல ஆண்டுகளாக போராடியும் வருகின்றனர்.

இந்நிலையில் தருமபுரி மாவட்ட வனத் துறை சார்பில் விவசாயிகளுக்கான குறை தீர்க்கும் கூட்டம், முறையாக நடைபெறும் என தெரிவித்த வன அலுவலர் அப்பல்லோ நாயுடு தலைமையில் விவசாயிகள்குறைதீர்க்கும்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஏரி மலைகிராமத்தைச்சேர்ந்த மக்கள் தங்கள் பகுதிக்கு தார்சாலை அமைப்பதற்கு வனத் துறை அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியு றுத்தி கோரிக்கை வைத்தும் இதுவரை வனத் துறை இம்மியளவும் நடவடிக்கை எடுக்கவில்லை என கவலை தெரிவித்தனர்.

ஏரி மலையில் 65 க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் மற்றும் மற்ற இனத்தவர்கள் சேர்ந்து 150க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வரு கின்றனர். 20 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் அடிப்படை வசதிகள் கேட்டு ஓய்ந்து போய் குழந்தைகளின் கல்விக்காகவும் அடிப்படை தேவைகளுக்காகவும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மலை கிராமத்தை விட்டு விட்டுநகரங்களைநோக்கி சென்று விட்ட னர். எஞ்சியுள்ள 150 குடும்பத்தி னர் வசித்து வருகின்றனர்.

மலை கிராம குழந்தைகளுக்காக இங்கு அங்கன் வாடி பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் 15 குழந்தைகள் உள்ளனர். ஒரு ஆசிரியர் உள்ளார். மேலும் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் 26 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். 3 ஆசிரியர்கள் பணி யாற்றுகின்றனர்.

மேலும் 11 மற்றும் 12ம் வகுப்பு பயில்வதற்கு மலை கிராமத்தை விட்டு மலையடிவாரத்தில் உள்ள சீங்காடு, மற்றும் திருமல்வாடி, பாலக்கோடு பகுதியில் உள்ள பள்ளிக்கு செல்ல வேண்டும் தினமும் பள்ளிக்குச் சென்று வரவனப்பகுதியைகடந்து செல்லும்போது வனவிலங்குகளின் அச்சுறுத்தல் உள்ளது.

தினமும் 4 கிலோ மீட்டர் மலை ஏறி இறங்க வேண்டும் இதுபோன்ற இன்னல்களால் உயர்கல்வியை தொடர முடியாமல் மாணவிகள் 10ம் வகுப் போடு பள்ளிப் படிப்பை முடிப்பதால் உயர்கல்வி என்பது மலை கிராம மாணவர்களுக்கு கேள்விக்குறியாக உள்ளது.

மேலும் அந்த மலை கிராம மக்கள் அத்தியாவசிய தேவை களுக்காக பொருட்களை வாங்க கீழே தான் சென்று வர வேண்டும்.

நாடுசுதந்திரம்அடைந்து 77 ஆண்டுகள் ஆன நிலையிலும் தங்களது கிராமத்திற்கு சாலை வசதி இல்லாது இருப்பதால், உடல்நிலை சரியில்லாத நேரங்களிலும், கர்ப்பிணி பெண்களை பிரசவ காலத்தில் தூளி கட்டி எடுத்து செல்லும் போதும் பாதை இல்லாததால் மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் உயிரிழப்புகள் ஏற்படுகிறது.

பாம்பு உள்ளிட்ட விஷகடியில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கால தாமதம் ஏற்படுவதாலும் உயிரிழப்புகள் ஏற்படுகிறது. மழைக்காலங்களில் பாதை சறுக்குவதால் பொது மக்கள் சிலர் விழுந்தும் காயங்கள் ஏற்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களின் அடிப்படை தேவையான சாலை வசதியை அமைத்துக் கொடுத்தால் அப்பகுதி மக்கள் இந்திய குடிமகன்களாக தலை நிமிர்ந்து நிற்போம் என தலைமுறைகளோடு 77 ஆண்டுகளாக எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

எனவே ஏரிமலை முதல் சீங்காடு வரை தார் சாலை அமைக்க வனத்துறை அனுமதி அளிக்க வேண்டும் என மலை கிராம மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# மண்டல பூஜை தொடக்கம்: ஐயப்பன் கோவில்களில் பக்தர்கள் மாலை அணிய சிறப்பு ஏற்பாடுகள்

சென்னை, நவ.17

சபரிமலைஅய்யப்பன்கோவிலில்நடைதிறக்கப்பட்டது. மண்டல பூஜை காலம் தொடங்குகிறது. 41 நாட்கள் மண்டல பூஜை நடைபெறும். அதன் பிறகு மகர விளக்கு பூஜை காலம் தொடங்கும்.

இந்த காலத்தில் மாலை அணிந்து விரதம் இருந்து லட்சக்கணக்கான அய்யப்ப பக்தர்கள் சபரி மலைக்கு செல்வார்கள்.

மண்டல பூஜை காலத்தில் சபரிமலைக்கு செல்பவர்கள் பம்பை வரை வாகனங்களில் செல்வார்கள். அங்கிருந்து சின்னப் பாதை எனப்படும் நீலிமலை வழியாக கால்நடையாக அய்யப்பன் சன்னிதானம் செல்வார்கள். மகரவிளக்கு காலத்தில் செல்லும் பக்தர்களில் பலர் எரிமேலி வரை வாகனங்களில் செல்வார்கள். அங்கு பேட்டை துள்ளிவிட்டு அடர்ந்த காட்டுப் பகுதியான பெருவழி பாதையில் நடந்து செல்வார்கள். பேரூர்தோடு, காளைகட்டி, அழுதாமலை, கல்லிடும் குன்றம், கரிமலை, பெரியானை வட்டம் வழியாக பம்பை சென்றடைவார்கள் அங்கிருந்து நீலிமலை வழியாக சன்னிதானம் செல்வார்கள்.

நாளை விரதத்தை தொடங்கும் அய்யப்ப பக்தர்கள் அதிகாலையில் துளசி மாலை அணிவார்கள். அன்றாட வாழ்வியலில் இருந்து மாறுபட்டு துறவு வாழ்க்கை போல் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றி கொள்வார்கள். கருப்பு, நீலம், காவி ஆடைகள் அணிந்து, காலில் செருப்பு அணியாமல் இருப்பார்கள். தினமும் காலையிலும், மாலையிலும் குளிர்ந்தநீரில் குளித்து சரணம் சொல்லி பூஜை செய்வார்கள்.

விரத காலம் முழுவதும் உணவு கட்டுப்பாடு, மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பார்கள். புனிதமான மாலை அணியும் நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது. இதற்காக சென்னையில் உள்ள முக்கியமான அய்யப்பன் கோவில்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோடம்பாக்கம் மகாலிங்க புரத்தில் உள்ள அய்யப்பன் கோவிலில் ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் மாலை அணிவார்கள். கடந்த ஆண்டு சுமார் 15 ஆயிரம் பேர் மாலை அணிந்ததாகவும் இந்த ஆண்டு அதைவிட அதிகமாக இருக்கும் என்று கருதுவதால் கோவிலில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக கூறினார்கள்.

அதிகாலை 4.30 மணிக்கு நடை திறக்கிறது. அதுமுதல் மாலை அணியலாம். கோவிலிலேயே மாலை மற்றும் நீல வேஷ்டிகள் விற்பனைக்கு ஏற்பாடு செய்துள்ளனர். டிக்கெட் கட்டணமாக ரூ.10 வசூலிக்கிறார்கள்.

ராஜா அண்ணாமலை புரத்தில் 18 படிகளுடன் கோவில் அமைந்துள்ளது. இங்கு காலை 6 மணிக்கு நடை திறக்கிறது. அது முதல் மாலை அணியலாம். டிக்கெட் கட்டணம் ரூ.10 செலுத்தி மாலை அணிந்து கொள்ளலாம். மாலை, வேட்டிகள் விற்பனைக்காக தனியாக கடைகள் உள்ளன.

மடிப்பாக்கம் அய்யப்பன் கோவிலில் 18 படிகள் அமைந்துள்ளது. மாலை அணிந்து இருமுடி கட்டி செல்பவர்கள் மட்டும் படிகள் வழியாக ஏறி செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இன்று சுத்தி பூஜை நடந்தது. நாளை காலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டதும் பக்தர்கள் மாலை அணியலாம். இங்கும், மாலை, வேஷ்டி, விற்பனைக்கு உள்ளது. அர்ச்சனை கட்டணமாக ரூ.10 செலுத்த வேண்டும். காலை 9 மணிக்கு கொடியேற்றம் நடக்கிறது. அதைத் தொடர்ந்து பறை எடுப்பு (நெல் அளப்பது) நடைபெறுகிறது. ஊர்வலமாகஅய்யப்பாநகர்தெருவில்அழைக்கப்பட்டவீடுகளுக்கு சென்று நெல் அளப்பார்கள். மாலையில் படி பூஜை நடக்கிறது. தொடர்ந்து 18 நாட்கள் படி பூஜை நடக்கிறது.

மேடவாக்கம் அருகில் உள்ள வெள்ளக்கல்லில் 18 படியுடன் கூடிய அய்யப்பன் கோவில் அமைந்துள்ளது. இங்கு அதிகாலை 4.30 மணிக்கு நடை திறக்கப்பட்டதும் பக்தர்கள் மாலை அணியலாம். தினமும் சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடைபெறுவது போல் பூஜைகள் நடைபெறும்.

திருவொற்றியூர் ஹைரோடு டோல்கேட் அருகே வட சென்னை அய்யப்பன் கோவில் அமைந்துள்ளது. இங்கு நாளை காலை 4 மணிக்கு நடை திறக்கப்படுகிறது. நிர்மால்ய தரிசனம், அபிஷேகம் முடிந்ததும் அய்யப்பனுக்கு சந்தனக் காப்பு அலங்காரம் நடைபெறும். மணலி, காசிமேடு, திருவொற்றியூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ளவர்கள் ஏராளமானோர் மாலை அணிந்து கொள்வார்கள். அண்ணாநகர் அய்யப்பன் கோவில் நாளை காலை 5 மணிக்கு நடை திறக்கப்படுகிறது. உடனே பக்தர்கள் மாலை அணிய தொடங்குவார்கள் என்றனர்.

இந்த அய்யப்பன் கோவில்கள் அனைத்திலும் மாலை அணிவதோடு, மாலை அணிந்த பக்தர்கள் இருமுடி கட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

# சேலம் சூரமங்கலத்தில் 17 வயது சிறுமி கடத்தல்

சேலம்: நவ.17

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் சிவன். இவரது மகன் நவீன் (26). இவர் சேலத்தில் உள்ள ஜவுளிக் கடையில் வேலை பார்த்து வருகிறார். அதே கடையில் கோயம்புத்தூரை சேர்ந்த 17 வயது சிறுமி சேலத்தில் தங்கி இருந்து வேலை பார்த்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று அந்த சிறுமி திடீரென மாயமானார். இதனால்அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் அக்கம் பக்கத்தில் தேடினர். பின்னர் சேலம் சூரமங்கலம் அனைத்து மகளிர் போலீசில் புகார் கொடுத்தனர். அதில் நவீன் தனது மகளை கடத்தியதாக புகார் கூறியிருந்தனர்.

இந்த புகாரின் பேரில் நவீனை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம்

பரமத்திவேலூர், நவ.17

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் வருகிற 21ந் தேதி (செவ்வாய்க்கிழமை) கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து ஆர்.டி.ஓ. சுகந்தி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மாவட்டத்தில் இம்மாதத்திற்கான கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 21ந் தேதி அன்று காலை 10 மணி அளவில் பரமத்தி வேலூர் வர்த்தகர் சங்க திருமண மண்டபத்தில் நடக்கிறது. கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கப்பிரதிநிதிகள் தங்களது பயிர் சாகுபடிக்கு தேவையான நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் இடுபொருட்கள் இருப்பு விவரங்கள், வேளாண் உழவர் நலத் துறை மற்றும் இதர துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மானிய திட்டங்கள் குறித்து அறிந்து கொள்வதுடன் தங்களது கோரிக்கைகளையும் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடி கம்பம் நட எதிர்ப்பு தெரிவித்த போலீசார்



மத்தூர், நவ.17

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே உள்ள கவுண்டப்பனூர் அருந்தியர்காலனி கிராமத்தில் சுமார் 45க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்த கிராம மக்கள் தங்களது ஊரின் எல்லையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடி கம்பம் நட்டு விழா காலங்களில் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி வந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை கொடிக்கம்பம் பழமையான நிலையில் அதனை புதுப்பித்து புதிய கொடிக்காம்பம் நட கட்சியினர்ஈடுபட்டிருந்தநிலையில் அங்கு வந்த மத்தூர் போலீசார் கொடி கம்பம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் கட்சி நிர்வாகிகள், போலீசார் இடையே வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் போலீசார் கிராம மக்களை விசாரணைக்கு அழைத்ததாக தெரிகிறது. அப்போது சுமார் 30க்கும் மேற்பட்ட போலீசார் கிராமத்தில் முகாமிட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்து அங்கு வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் குபேந்திரன், தர்மபுரி கிருஷ்ணகிரி மாவட்ட மண்டல துணை செயலாளர் மோகன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் என சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கிராமத்திற்கு வந்து வருவாய் துறையினர் மற்றும் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்போது கட்சியினர் கூறுகையில்: கொடி கம்பம் நடுவதற்கு போலீசார் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் கிராமத்தில் இருந்த பெண்களை சமூக பெயரை கூறி போலீசார் ஈடுபட்டதாகவும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் கட்சியினர் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து அதிகாரிகள் விடுதலை சிறுத்தைகள் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடிகம்பத்தை புதுப்பித்து நடும் பணியில் ஈடுபட்டதற்கு போலீசார் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்



ஓசூர் , நவ.17

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம், ஓசூரில் நேற்று நடைபெற்றது. ஓசூர்காமராஜ் காலனியில் உள்ள ஆந்திர சமிதியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, மாவட்ட துணை செயலாளர் முருகன் தலைமை தாங்கினார். மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில், வருகிற 22 மற்றும் 23ந் தேதி ஆகிய 2 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும், கட்சி தலைவரும், முதலமை ச்சருமான மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பிஎல்ஏ 2, பிஎல்சி குறித்தும் மற்றும் கட்சி ஆக்கப்பணிகள் குறித்துதம் கூட்ட த்தில் விவாதிக்கப்ப ட்டது. இதில், மாநகர செயலாளரும், மேயருமான எஸ்.ஏ.சத்யா, துணை மேயர் ஆனந்தய்யா, மற்றும், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கட்சியினர் கலந்து கொண்டனர்.

# மலைவாழ் மக்களுடன் ஜிகர்தண்டா 2 படம் பார்த்த கார்த்திக் சுப்பராஜ்

'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவானது. தீபாவளியை முன்னிட்டு வெளியாகி இருக்கும் இந்த படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ். ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். இப்படம் இதுவரை ரூ.17 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்திற்கு பிரபலங்கள் பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் 'ஜிகர்தண்டா 2' படத்தில் நடித்த மலைவாழ் மக்களுடன் இப்படத்தை பார்த்துள்ளார். இது தொடர்பான புகைப்படத்தைதனதுசமூகவலைதளத்தில்பகிர்ந்துள்ள அவர், "ஜிகர்தண்டா 2 படத்தை அப்படத்தில் நடித்த தண்டிக்குடி மக்களுடன் திரையரங்கில் பார்த்தேன். பெரிய திரையில் வருவதை பார்த்து மகிழ்ச்சியடைந்த அவர்களை பார்த்து மகிழ்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# தமிழ்நாடு தியேட்டர் உரிமையாளர்கள் சங்க தலைவர் திருப்பூர் சுப்பிரமணியம் "திடீர்" ராஜினாமா

தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தவர் திருப்பூர் சக்தி சுப்ரமணியம். இவருக்கு சொந்தமான தியேட்டர்கள் திருப்பூரில் உள்ளது. இங்குகடந்ததீபாவளிஅன்றுஅரசுஅனுமதித்த நேரத்திற்கு முன்பாக சிறப்பு காட்சிகள் வெளியிட்டதாக புகார்கள் வந்தது. இந்த புகாரின் அடிப்படையில் தாசில்தார் நேரடியாக ஆய்வு செய்து அதுதொடர்பான அறிக்கையைதிருப்பூர்மாவட்டகலெக்டருக்குஅனுப்பி வைத்தார்.

இந்தஅறிக்கையின்அடிப்படையில்அரசுஅனுமதித்த நேரத்திற்கு முன்பாக சிறப்பு காட்சிகள் வெளியிட்டதற்கான விளக்கம் கேட்டு தியேட்டர் உரிமையாளர் சக்தி சுப்ரமணியத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த நிலையில் திருப்பூரில் இன்று சக்தி சுப்பிரமணியம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்,

தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் மற்றும் கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்ட திரையரங்கு உரிமையாளார்கள் சங்க தலைவர் பொறுப்பில் இருந்து ராஜினாமா செய்து கொள்கிறேன். எனது சொந்த வேலை காரணமாக இந்த முடிவை எடுத்துள்ளேன். இதுவரை எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி என்றார்.



# இணைந்து பயணிப்பதற்கான கவுண்டவுன் தொடங்கி விட்டது காதலில் உருகிய கார்த்திகா

80 கால கட்டத்தில் முன்னணி கதாநாயகியாக இருந்தவர் நடிகை ராதா. மும்பை தொழில் அதிபருடன் திருமணமாகி இவருக்கு கார்த்திகா, துளசி ஆகிய மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். கார்த்திகா 'கோ' படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடித்துள்ளார். தொடர்ந்து சில படங்களில் நடித்து வந்தார். சினிமா வாய்ப்புகள் போதிய அளவு இல்லாததால் சினிமாவில் இருந்து விலகி தந்தையுடன் இணைந்து பிசினசில் ஈடுபட்டார்.

இந்த நிலையில் கடந்த மாதம் கார்த்திகாவுக்கு ரோகித் என்பவருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இந்த புகைப்படங்களை கார்த்திகா இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு இருந்தார். தற்போது வருங்காலகணவரான ரோகித்துடன் இணைந்து எடுத்த ரொமான்ஸ் புகைப்படங்களை வலை தளங்களில் கார்த்திகா பதிவிட்டுள்ளார். புகைப்படத்துடன் "உன்னை சந்திக்க வேண்டும் என்று விதி எழுதப்பட்டுள்ளது. உன்னை விரும்பியது ஒரு மேஜிக்காக நிகழ்ந்தது. உன்னுடன் இணைந்து பயணிப்பதற்கான கவுண்டவுன் தொடங்கி விட்டது" என்று பதிவிட்டுள்ளார்.



கார்த்திகா ரோகித் திருமணம் வருகிற 19ந்தேதி காலை திருவனந்தபுரத்தில் நடக்கிறது. ராதாவுக்கு சொந்தமான ஓட்டலில் நடைபெறும் திருமண விழாவில் நெருங்கிய உறவினர்கள், திரைப்பிரபலங்கள் கலந்து கொள்கின்றனர்.

# ஆந்திராவில் கனக துர்க்கை அம்மன் கோவிலில் நடிகை ஹன்சிகா தரிசனம்

ஆந்திர மாநிலம் என். டி.ஆர். மாவட்டம் விஜய வாடாவில் பிரசித்தி பெற்ற கனகதுர்க்கை அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் நடிகை ஹன்சிகா நேற்று தரிசனம் செய்ய வந்தார். அவரை கோவில் அதிகாரிகள் வரவேற்றனர். தொடர்ந்து ஹன்சிகா சாமிதரிசனம்செய்தார். வேதபண்டிதர்கள்ஆசிர்வாதம் வழங்கினார்கள். கோவில்நிர்வாகிகள்ஹன்சிகாவுக்கு அம்மன் உருவப்படம், பிரசாதம் வழங்கினார்கள்.

வளையல் அலங்காரத்தில் துர்க்கை அம்மனை வழிபாடு செய்தது மகிழ்ச்சியாக உள்ளது. மை நேம் இஸ் ஸ்ருதி படம் எனது நடிப்பில் 17ந் தேதி உலகம் முழுவதும் வெளியாகிறது. இந்த படத்தின் புரமோஷன் நிகழ்ச்சியாக விஜயவாடா வந்தோம். அனைத்து பார்வையாளர்களும் ஆதரிக்க வேண்டும் என்று கூறினார்.



# சோதனை மேல் சோதனை.. வெறுப்பின் உச்சத்தில் விஜய் சேதுபதி ரசிகர்கள்

பாலிவுட் இயக்குனர் ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் தயாராகி இருக்கும் திரைப்படம் 'மேரி கிறிஸ்துமஸ்'. இந்த திரைப்படத்தில் விஜய் சேதுபதி மற்றும் பாலிவுட் நடிகை கத்ரீனா கைஃப் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். டிப்ஸ் பிலிம்ஸ் மற்றும் மேட்ச் பாக்ஸ் பிக்சர்ஸ் நிறுவனங்கள் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது.

இந்த படத்தின் தமிழ் மற்றும் இந்தி பதிப்புகளில் தனித்தனியாக பல்வேறு நடிகர்கள் நடித்துள்ளனர். 'மேரி கிறிஸ்துமஸ்' திரைப்படம் டிசம்பர் 15ஆம் தேதி வெளியாகும் என படக்குழு முன்பே அறிவித்து பின்னர் டிசம்பர் 8ஆம் தேதி வெளியாகும் என அறிவித்திருந்தது.

இந்நிலையில், தற்போது இந்த தேதியும் மாற்றப்பட்டுள்ளது. அதாவது, 'மேரி கிறிஸ்துமஸ்' திரைப்படம் ஜனவரி 12ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. கத்ரீனா கைஃப் விஜய் சேதுபதியின் கெமிஸ்ட்ரியை பார்க்க ஆவலாக இருந்த ரசிகர்கள் இதனால் வெறுப்பின் உச்சத்தில் உள்ளனர்.



# இப்படி பண்ணலாமா..? விஷ்ணு விஷாலை வறுத்தெடுத்த நெட்டிசன்கள்

வெண்ணிலாகபடிகுழு, குள்ளநரிகூட்டம், நீர்பறவை, முண்டாசுப்பட்டி, ஜீவா, இன்று நேற்று நாளை, ராட்சசன், எஃப்ஐஆர் உள்ளிட்ட பல படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் விஷ்ணு விஷால். இவர் தற்போது ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி வரும் லால் சலாம் படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் ரஜினி சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார். 'லால் சலாம்' திரைப்படம் பொங்கலுக்கு திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

நடிகர் விஷ்ணு விஷால் நவம்பர் 14ஆம் தேதி தனது சமூக வலைதளத்தில் கமல் மற்றும் அமீர்கானுடன் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்து 'Superstars are super stars for a reason' என்றும் குறிப்பிட்டிருந்தார். பின்னர் சிறிது நேரத்தில் அந்த புகைப்படத்தில் ஏற்கெனவே இருந்த பதிவை மாற்றி 'stars are stars for a reason' என்று குறிப்பிட்டிருந்தார். இது சமூக வலைதளங்களில் சர்ச்சையானது. அதுமட்டுமல்லாமல் பலரும் முதலில் சூப்பர் ஸ்டார்ஸ் என்று குறிப்பிட்டுவிட்டு பின்னர் ஏன் மாற்றவேண்டும்? என்று விஷ்ணு விஷாலை விமர்சித்து வந்தனர்.

இந்த நிலையில், விஷ்ணு விஷால் இதற்கு விளக்கமளித்துள்ளார். அதில், "சூப்பர்ஸ்டார்கள்சூப்பர் ஸ்டார்கள் தான். அந்தப் பதிவை நான் எடிட் செய்துவிட்டேன் என்பதற்காக நான் பலவீனமானவன் அல்ல. சூப்பர் ஸ்டாராக இருக்கும் அனைவரையும் நான்நேசிக்கிறேன். எனவேஎன்னுடையடைம்லைனில் நெகட்டிவிட்டியை பரப்புவோர் இங்கிருந்து கிளம்புங்கள். நமக்கென்று ஒரே ஒரு சூப்பர் ஸ்டார் பட்டம் மட்டுமே உள்ளது. ஆனால் என்னுடைய மதிப்புக்கு அப்பாற்பட்டு, சாதித்த அனைவருமே சூப்பர் ஸ்டார்கள்தான். அனைவரையும் நேசியுங்கள்.




# தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி 8வது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது ஆஸ்திரேலியா

உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் 2வது அரையிறுதி போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று நடைபெற்றது. இதில் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் மோதின. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 212 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. முன்னணி வீரர்கள் விரைவில் அவுட்டாகினர். ஒரு பக்கம் விக்கெட் வீழ்ந்தாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டேவிட் மில்லர் சதமடித்து அசத்தினார். அவர் 101 ரன்னில் அவுட்டானார். கிளாசன் 47 ரன்னில் அவுட்டானார்.

ஆஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க், கம்மின்ஸ் தலா 3 விக்கெட்டும், ஹேசில்வுட், ஹெட் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 213 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் டிராவிஸ் ஹெட் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 62 ரன்னில் ஆட்டமிழந்தார். ஸ்மித் 30 ரன்னும், வார்னர் 29 ரன்னும் எடுத்து அவுட்டாகினர். கடைசியில் போராடிய இங்கிலிஸ் 28 ரன்கள் எடுத்து வெளியேறினார். இறுதியில், ஆஸ்திரேலியா 7 விக்கெட் இழப்புக்கு 215 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. வரும் ஞாயிறன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, இந்திய அணியை எதிர்கொள்கிறது.





# ஜெர்சியை மாற்றிக் கொண்ட ரோகித் சர்மா டேவிட் பெக்காம்.. வைரலாகும் புகைப்படம்


இங்கிலாந்தை சேர்ந்த பிரபல முன்னாள் கால்பந்து வீரர் டேவிட் பெக்காம். உலகளவில் ரசிகர் பட்டாளம் கொண்ட டேவிட் பெக்காம் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த வகையில், நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் அரையிறுதி போட்டியை நேரில் காண வந்திருந்தார். மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

அரையிறுதி போட்டியை காண முன்னாள் வீரர்கள், திரைப்பிரபலங்கள் மற்றும் பல்வேறு நட்சத்திரங்கள் வந்திருந்தனர். பரபரப்பாக நடைபெற்ற அரையிறுதி போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறி இருக்கிறது. இந்த நிலையில், நேற்றைய போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மாவை டேவிட் பெக்காம் சந்தித்து பேசியுள்ளார். சந்திப்பின் போது, ரோகித் சர்மா ஜெர்சியை டேவிட் பெக்காமும், டேவிட் பெக்காமின் ஜெர்சியை ரோகித் சர்மாவும் அணிந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

# ஒற்றை ஆளாக கெத்து காட்டிய மில்லர் ஆஸ்திரேலியாவுக்கு 213 ரன்கள் இலக்கு நிர்ணயித்தது தென் ஆப்பிரிக்கா

இந்தியாவில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்று 2வது அரையிறுதி போட்டியில் புள்ளிப்பட்டியலில் 2 மற்றும் 3ம் இடங்களை பிடித்த தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி தென் ஆப்பிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக டிகாக் மற்றும் பவுமா ஆகியோர் களமிறங்கினர். பவுமா 0, டிகாக் 3, மார்க்ரம் 10, ராஸ்ஸி வான் டெர் டுசென் 6 ரன்கள் எடுத்து வெளியேறினர். இதனால் 11.5 ஓவர்களில் 24 ரன்கள் எடுத்து 4 விக்கெட்டுகளை இழந்து தென் ஆப்பிரிக்கா திணறியது. இதனையடுத்து கிளாசன் மில்லர் ஜோசி நிதானமாக விளையாடி ரன்களை சேர்த்தனர். இந்த ஜோடியை ஹெட் பிரித்தார். கிளாசன் 47 ரன்னில் இருந்த போது ஹெட் பந்து வீச்சில் போல்ட் ஆனார். அடுத்த வந்த மார்கோ யான்சன் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

ஒரு பக்கம் விக்கெட் போனாலும் மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த மில்லர் அரைசதம் விளாசி அசத்தினார். கடைசி வரை போராடிய அவர் சதம் அடித்து 101 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் தென் ஆப்பிரிக்கா அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 212 ரன்கள் சேர்த்தது. ஆஸ்திரேலிய அணி தரப்பில் ஸ்டார்க், கம்மின்ஸ் 3 விக்கெட்டும், ஹசில்வுட், ஹெட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.





Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.